OS.No.310/2013 – 23.01.2024

PW1 – ராமசாமி

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு 13 முதல் 17 மற்றும் 19 முதல் 21 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

என்னுடைய தங்கை சின்னம்மாள் 30 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார். வா.சா.ஆ.2 ஆவணத்தை என் தகப்பனார் என்னை மைனராக காண்பித்து சுமார் 55 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரி. அப்போது 4 பக்கமும் செக்குபந்தி போட்டுதான் கிரயம் கொடுக்கப்பட்டது என்றால் சரி. அந்த பத்திரத்தில் உங்களுக்கு பாத்தியப்பட்ட பாகத்திற்கும் மேற்கு, ராமசாமி கவுண்டர் பாகத்திற்கு வடக்கு, இதே நெம்பரில் எனக்கு பாத்தியப்பட்ட பாகத்திற்கும் கிழக்கு, தங்களுக்கு பாத்தியப்பட்ட மேற்கு பாகத்திற்கும் தெற்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அடையாளம் காண்பிப்பதற்காக தான் அவ்வாறு காண்பிக்கப்பட்டுள்ளது, ஆனால் பாகம் செய்து கொடுக்கப்படவில்லை. வா.சா.ஆ.3 ல் எவ்வளவு அளவு கிரயம் பெற்றுள்ளேன் என்றால் 4 ல் ஒன்றை கிரயம் பெற்றுள்ளேன். மேற்படி பத்திரத்தில் எவ்வளவு அளவுள்ள நிலத்தில் 4 ல் ஒரு பாகம் என்று குறிப்பு இல்லை என்றால் சரி. வா.சா.ஆ.3 ல் ஒரு சர்வே எண்ணில் 3 ல் ஒரு பங்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் கிரயம் பெற்ற

சொத்தின் மொத்த அளவு எவ்வளவு இருக்கும் என்றால் 5 ஏக்கர் 85 செண்ட் 4 ல் ஒரு பாகம் என்று சொல்லி கிரயம் பெற்றிருக்கிறேன். நான் சொல்வதுபோல 5 ஏக்கர் 85 செண்டை கிரயம் பெறவில்லை, நான் தற்போது வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் யாரிடம் கிரயம் பெற்றேன் என்றால் நல்லாகவுண்டரின் வாரிசுகளிடம் கிரயம் பெற்றேன். நல்லா கவுண்டர் உயிருடன் இருக்கும் காலத்தில் அவருக்கு பாத்தியப்பட்ட 4 ல் ஒரு பங்கில் பாதியை 1,2 பிரதிவாதிகளுக்கு கிரயம் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. நல்லா கவுண்டர் வகையராவிற்கு மொத்த சொத்தில் 8 ல் 1 பங்குதான் பாத்தியம் என்றால் சரியல்ல. 4 ல் ஒரு பங்கு பாத்தியம். நான் வழக்கு சொத்து முழுவதற்கும் பட்டா தாக்கல் செய்துள்ளேனா என்றால் முழு நிலத்திற்கும் பட்டா தாக்கல் செய்துள்ளேன். அவரவர் பெயரில் உள்ள தனி பட்டாவைதான் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தனி சுவாதினத்தில் இல்லை. 8 பட்டாக்களும் வெவ்வேறு பெயரில் உள்ளது என்றால் சரிதான். ஆனால் எனக்கு தெரியாமல் பட்டா பெற்றுள்ளார்கள். என் பெயரில் தனி பட்டா உள்ளதா என்றால் உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.3 ல் நல்லா கவுண்டரின் பெண் வாரிசுகள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அப்போது அவர்கள்

உயிருடன் இல்லை. 1972 லேயே 1960 ம் ஆண்டு கிரயம் பெற்ற நால்வருக்கும் 1972 க்கு முன்பே தனித்தனியாக பாகம் ஏற்படுத்திக்கொண்ட படியால் நான் வா.சா.ஆ.3 ஆவணத்தில் அந்த 4 ல் ஒருவரான நல்லா கவுண்டரின் பெண் வாரிசுகளிடம் இருந்து கிரயம் பெறவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் ஏற்கனவே பாகம் பிரிக்கப்பட்டதாகதான் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்ல செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் 3 வது பக்கத்தில் நாங்கள் தனித்தனியாக அனுபவம் செய்து வருகிறோம் என்று குறிப்பிட்டிருககிறேன் என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தில் கூட்டு அனுபவம்செய்து வருவதாக சொல்வது முற்றிலும் தவறானது என்றால் சரியல்ல. நான், என் அப்பா உயிருடன் இருக்கும் காலத்திலேயே அவருக்கு பாத்தியப்பட்ட மொத்த சொத்தில் 4 ல் ஒரு பங்கில் பாதியை 1,2, பிரதிவாதிகளின் வகையராவிற்கு கிரயம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ல் நான் வாங்கிய சொத்தானது ஏற்கனவே எனக்கு விற்ற நல்லாகவுண்டருக்கு 8 ல் ஒரு பங்குதான் இருந்தது என்றும், நல்லாகவுண்டர் உயிருடன் இருக்கும் காலத்திலேயே மொத்த சொத்தில் 8 ல் ஒரு பங்கை 1,2 பிரதிவாதிகளுக்கு விற்பனை செய்துவிட்டார் என்றால் சரியல்ல. என் தகப்பனார் மூலம் எனக்கு வந்த 8 ல் ஒரு பங்கு, நான் விலைக்கு வாங்கியதும் 8 ல் ஒரு

பங்குதான் என்றும், எனவே எனக்கு மொத்தமாக 8 ல் 2 பங்கு பாத்தியம் என்றால் சரியல்ல. அந்த சொத்திற்குதான் வருவாய் துறையில் என் பெயரில் பட்டா உள்ளது என்றால் சரியல்ல. நான்தான் சம்மந்தமே இல்லாமல் 64 ஆண்டுகள் கழித்து மற்ற பாகஸ்தர்களின் பங்கிலும் பாகம் உள்ளதாக வழக்காடுகிறேன் என்றால் சரியல்ல. 1972 ல் வாய்மொழியாக பாகம் ஏற்பட்டு 1984 ல் அவரவர்களுக்கு தனித்தனியாக பட்டா வழங்கப்பட்டு தனி சுவாதினத்தில் இருந்து வருகிறார்கள் என்றும், எனவே மற்றவர்களின் சொத்தில் எனக்கு பாகம் கோர உரிமையில்லை என்றால் சரியல்ல. 1960 ம் ஆண்டு மூல ஆவணங்களின் அடிப்படையில் பாக உரிமை கோரியிருப்பதால் அதனை பின்னிட்ட அனைத்து வாரிசுகளையும் தரப்பினராக வழக்கில் சேர்க்காததால் வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. எனது தகப்பனாரும் எனக்கு விற்பனை செய்த நல்லா கவுண்டரும் 1,2 பிரதிவாதிகளின் வகையராவிற்கு எழுதிக்கொடுத்த பத்திர எண்.2513/1960 ஐ மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளது தவறு என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 ஆவணத்தில் ஒவ்வொரு சர்வே எண்ணிலும் பட்டாதாரரின் பெயர் தனியாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் என்னிடம் கேட்காமல் அரசாங்கமே அவ்வாறு போட்டுள்ளது. வருவாய் ஆவணங்கள் தனித்தனியாக ஏற்பட்டு சுமார் 40 ஆண்டுகள் ஆகியும் தற்போது நான் தவறாக

வழங்கப்பட்டுள்ளது என்று நான் வழக்காட முடியாது என்றால் சரியல்ல. எனக்கு தாவா சொத்தில் மொத்தத்திலேயே சுமார் 4½ ஏக்கர்தான் பாத்தியம் என்றால் சரியல்ல. வருவாய் ஆவணங்கள் ஏற்பட்டது தவறு என்று அதை திருத்தம் செய்யாமல் அவை செல்லாது என்று சொல்லமுடியாது என்றால் சரியல்ல. 10 வருடத்திற்கு முன்னர்தான் நான் வழக்கு தாக்கல் செய்தேன். 60 ஆண்டுகளுக்கு மேலாக அவரவர் தனித்தனியாக பாகம் செய்து தனித்தனி சுவாதினத்தில் இருந்து வருவதால் நான் பாகம் கோர உரிமையில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள அனைத்து ஆவணங்களும் இரண்டு தரப்பினர்ளுக்கும் பாகம் ஏற்பட்டுள்ளதை காண்பிக்கிறது என்றால் சரியல்ல. நான் தூய கரங்களுடன் நீதிமன்றத்திற்கு வராத காரணத்தால் வழக்கை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,
Principal District Judge, Salem.